# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 25
இதழ் 08
டிசம்பர் 2023

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்









மதி அனுபவ அங்காடி திறப்பு விழா, மதி சந்தை விற்பனை இணையதளம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் இணையதளம்/கைப்பேசி செயலி

## துவக்க விழா



முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

**உங்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.**

ஊரகப் பகுதியில் வசிக்கும் ஏழை எளிய பெண்கள் பொருளாதார சுயசார்பு பெற்று, முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் இன்று மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டு செயலாற்றி வருவது நமக்கெல்லாம் பெருமை தரக் கூடிய ஒன்றாகும். சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவையினை நிறைவு செய்யும் வகையில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக நடப்பு நிதியாண்டில் ரூ.30 ஆயிரம் கோடி வழங்கப்படும் என்று அறிவித்தது சுய உதவிக் குழுக்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

சுய உதவிக் குழு மகளிரின் மேம்பாட்டிற்காக பாடுபட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழிகாட்டியாக இருந்துவரும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு பொருட்களை சந்தைப்படுத்த தொடர்ந்து பல்வேறு முனைப்புகளை எடுத்து வருகிறார்கள்.

ஊக்கத்துடன் உழைப்பவர்களிடம் புகழும் பொருளும் வழிகேட்டு செல்லும் என்பதை உரைக்கும்

***"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா***
***ஊக்க முடையா னுழை"***

என்ற குறள் வரிகளின்படி, ஊக்கத்துடன் உழைக்கும் சுய உதவிக் குழுவினரான உங்களிடம் புகழும் பொருளும் வழிகேட்டு வரும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)

**நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டு செயலாற்றி வருவது நமக்கெல்லாம் பெருமை தரக் கூடிய ஒன்றாகும்**



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

**அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள்.**

சுய உதவிக்குழு இயக்கத்தில் இணைந்து சாதனைகளைப் படைத்துவரும் உங்களுடன் முற்றம் இதழின் வாயிலாக எனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் இத்தருணம் எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சுய உதவிக்குழுவினரின் வளர்ச்சியில் தனி அக்கறை செலுத்தி வருகிறார் என்பது நாம் அறிந்ததுதான். இதன் காரணமாகத்தான் அரசின் பிற துறைகளின் சார்பாக செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களிலும் சுய உதவிக்குழுவினரை ஈடுபடுத்தி, சுய உதவிக்குழுவினரின் செயல்பாடுகளுக்கு உயரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததுதான்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திட பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், நம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில்நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் சுய உதவிக்குழுவினரின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்திடும் கண்காட்சிகளைப் பார்வையிட்டு, அங்குள்ள சுய உதவிக்குழுவினருடன் கலந்துரையாடுவது நமக்குக் கிடைத்திட்ட பெருமையாகும்.

சமீபத்தில் கூட நமது அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சுய உதவிக்குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களின் மதி அனுபவ அங்காடியை திறந்து வைத்தும், சுய உதவிக்குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களை இணையதளத்தில் வாங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள மதி சந்தை விற்பனை இணையதளம் மற்றும் சுய உதவிக்குழுவினர், பொதுமக்கள் ஆகியோர் முற்றம் இதழிற்கான சந்தாவினை செலுத்தி, முற்றம் மாத இதழினை தங்களின் இல்லத்திற்கே நேரடியாக அஞ்சல்வாயிலாக பெற்றிடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் இணையதளம் /கைப்பேசி செயலி ஆகியவற்றை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தது, நமக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது.

பொருள் ஈட்டுவதற்கான செயல்களில் மட்டும் அக்கறை காட்டாமல், சமூக நலனிலும் அக்கறையுடன் செயல்பட்டு வருபவர்கள் சுய உதவிக்குழுவினர் என்பதற்கு எடுத்துக்காட்டாக சுய உதவிக்குழுவினரின் செயல்பாடுகள் உள்ளன. இவை மேலும் தொடர நீங்கள் அயராது பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)

## குறளும் – பொருளும்

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு

- (குறள்: 424)

நாம் சொல்ல வேண்டியவைகளை எளிய முறையில் கேட்போரின் இதயத்தில் பதியுமாறு சொல்லிப் பிறர் சொல்லும் நுட்பமான கருத்துக்களையும் ஆராய்ந்து தெளிவதே அறிவுடைமையாகும்.

# உள்ளே...



| | |
|---|---|
| புதிதாக 7.35 இலட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை | 06 |
| பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | 09 |
| சந்தையாளர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி | 13 |
| பெண்களை தாக்கும் பி.சி.ஓ.எஸ்... | 16 |
| சொந்தகாலில் நிற்கவைக்கும் சிறு / குறு தொழில் முனைவு | 18 |
| பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் சட்டம் | 27 |



சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.


மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com



tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial


"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ. 20/– • மலர் 25 • இதழ் 08 • டிசம்பர் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பா.ஜெயசுதா,** பொது மேலாளர் (பொ),

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**‘முற்றம்’**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# பருவ மழையும் பேரிடரும்...



**அன்புள்ள வாசகர்களுக்கு,**

ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டிற்கு போதிய மழையை கொடுப்பது வடழக்கு பருவ மழைதான். இந்த ஆண்டு பருவ மழை பெய்வதில் ஒரு மாற்றத்தை பார்க்க முடிகிறது. தென் தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும் அதேவேளையில், வட தமிழ்நாட்டில் பல மாவட்டங்கள் இதை எழுதுகின்ற நேரம்வரை மழையின்றி வறட்சியாகவே உள்ளன. கடந்த 123 ஆண்டுகளில் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் தான் மிக குறைவாக 43 சதவீத மழை மட்டுமே பெய்துள்ளது என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஒரு பகுதியில் வறட்சியை ஏற்படுத்தி விடுமோ என்ற ஐயமும் எழுகிறது. வெள்ளமும் வறட்சியும் இயற்கைச் சீற்றங்கள். இதுபோன்ற இயற்கைச் சீற்றங்கள் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பேரழிவுகளை ஏற்படுத்துவதையே பேரிடர் என்றோம். பூமி வெப்பமடைவதால் பருவங்கள் மாற்றமடைந்து இவ்வாறான பேரிடர்கள் எதிர்பாராத காலங்களில் ஏற்பட்டும் மனித குலத்திற்கு அச்சுறுத்தலாக மாறிவிட்டது.

உலக நாடுகளின் தலைவர்கள் பலமுறை ஒன்று கூடி புவி வெப்பமடைவதை தடுப்பதற்கு பல யுக்திகளை வகுத்தாலும், அவற்றை செயல்படுத்த அனைத்து தரப்பு மக்களும் முன்வராவிடில் எவ்வித பயனும் ஏற்படாது. இயற்கைப் பேரிடர்களை தடுக்க முடியாது என்பதை அனைவரும் அறிவோம். ஆனால் அவற்றினால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்துக் கொள்ள முடியும். எனவே, அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

எனவே, இயற்கை வளங்களையும் உயிர்ச்சூழலையும் பாதுகாப்போம். புகையை கட்டுப்படுத்துவோம். நிலத்தடிநீரை சேமிப்போம். மின்சார பயன்பாட்டையும், குளிரூட்டு சாதனங்களையும் கூடியவரை குறைத்துக் கொள்வோம். சிறுவர் முதல் பெரியவர் வரை பேரிடரை பற்றிய விழிப்புணர்வை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும்.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பெருபாலும் வெள்ளமும், புயலும் வருவது வழக்கமாக உள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு எவ்வித இயற்கை சீற்றங்கள் வந்தாலும் அவற்றை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் செய்துள்ளதை பாராட்டுவோம். அவர்களோடு ஒத்துழைப்போம்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்




# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் புதிதாக 7.35 இலட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.11.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில், கள ஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பயனாளிகளான 7.35 இலட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை வழங்கிடும் விதமாக 6 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.

### நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பற்றிய அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் 2023-24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் என சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

### மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.3.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், "மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, குடும்பத் தலைவிகளுக்கு அவரவர் வங்கிக்



கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இந்த மகத்தான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்றும் அறிவித்தார்.

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்யவேண்டும் என்றும், அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்றும், எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களை அறிவுறுத்தி இருந்தார்.

### தருமபுரியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்ப பதிவு முகாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசிற்கு வந்தது. அவற்றில் தகுதியுள்ள 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டது.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தல்

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15.9.2023 அன்று காஞ்சிபுரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

### புதிய பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் உரிமைத் தொகை வழங்குதல்

கலைஞர் உரிமைத் திட்டத்தின் கீழ் முகாம்களில் விண்ணப்பித்து கள ஆய்வு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 7.35 இலட்சம் புதிய பயனாளிகளுக்கு இன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/- உரிமைத் தொகை பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இத்திட்டத்தின் கீழ் தற்போது புதிதாக கண்டறியப்பட்டுள்ள 7.35 இலட்சம் பயனாளிகளுக்கும், ஏற்கனவே, வழங்கப்பட்டு வரும் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுடன் சேர்த்து திட்டத்தினை விரிவாக்கம் செய்து மொத்தம் 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 மகளிருக்கு நவம்பர் மாதத்திற்கான உதவித் தொகையினை 10.11.2023 இன்று வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.தயாநிதிமாறன், திரு.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர்டாக்டர். தாரேஸ் அகமது, இ.ஆ.ப., கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப., வங்கிகளின் உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கூட்டரங்கில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் ஆகியோர் முன்னிலையில், அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் 27.10.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சா. ஞானதிரவியம் அவர்கள், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. அப்துல் வகாப் அவர்கள், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் திரு.பி.எம்.சரவணன் அவர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் மரு. தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்கள், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. கா.ப. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## பல்துறை பணி விளக்க பணி விளக்க முகாமினை பார்வையிடுதல்

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கில் 28.10.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்துறை பணிவிளக்க முகாமினை பார்வையிட்டார்கள். உடன் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்,கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வ. விஜய் வசந்த் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி.பிரின்ஸ், திரு. ராஜேஷ்குமார், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் திரு. ரெ. மகேஷ், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் மரு. தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.என். ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



## பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ சேவையை துவக்கி வைத்து, தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் ரூ.16.51 கோடி மதிப்பில் 186 மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 2,450 உறுப்பினர்களுக்கு வங்கி பெருங்கடன் உள்பட மொத்தம் 2,513 பயனாளிகளுக்கு ரூ.16.52 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பெ.ராமலிங்கம், திரு. கு.பொன்னுசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் ஜெ.சங்குமணி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ரெ. சுமன், நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் கே.சாந்தா அருள்மொழி, மகளிர்திட்ட இயக்குநர் திருமதி மா.பிரியா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்குதல்

மயிலாடுதுறை மாவட்டத்தில் 21.11.2023 அன்று நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் கலந்து கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ.இராமலிங்கம் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.நிவேதா எம்.முருகன் அவர்கள், திரு. எஸ்.ராஜ்குமார் அவர்கள், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.பி. மகாபாரதி, இ.ஆ.ப., அவர்கள், கூட்டுறவு சங்கங்களின் மண்டலஇணைப் பதிவாளர் திரு.தயாளவிநாயகன் அமுல்ராஜ் அவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின்

## மதி அனுபவ அங்காடி திறப்பு விழா, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் மதி சந்தை விற்பனை இணைய தளம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் இணைய தளம் /கைப்பேசி செயலி ஆகியவை துவக்க விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.


சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள் வாயிலாக சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்புகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கி வருகிறது.

இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் பங்களிப்பு பெருகி வரும் இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்களை இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் வாயிலாக விற்பனை செய்ய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, இணைய தளம் வாயிலாக பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை வாங்கிடும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் மதி சந்தை விற்பனை இணைய தளம் மற்றும் சுய உதவிக் குழுவினர், பொதுமக்கள் ஆகியோர் முற்றம் இதழிற்கான சந்தாவினை செலுத்தி, முற்றம் மாத இதழினை தங்களின் இல்லத்திற்கே நேரடியாக அஞ்சல் வாயிலாக பெற்றிடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் இணைய தளம் /கைப்பேசி செயலி ஆகியவற்றையும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 18.11.2023 அன்று துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்கிடும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களின் மதி அனுபவ அங்காடியினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.




இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா அவர்கள், ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் (பொ) / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் திருமதி. சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள், மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதி அனுபவ அங்காடியில் சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் கலைநயம் மிகுந்த கலைப் பொருட்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், சுவையும் சத்தும் மிகுந்த உணவுப் பொருட்கள் போன்றவை அழகுற வைக்கப்பட்டுள்ளன. இந்த அனுபவ அங்காடிக்கு பொதுமக்கள் வருகை தந்து அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்களைப் பார்வையிட்டு, தங்களுக்குத் தேவையான பொருட்களை இணையதளம் வாயிலாக வாங்கிக் கொள்ளலாம். இந்த மதி அனுபவ அங்காடியில் சுய உதவிக் குழுவினரால் நடத்தப்படும் "மதி கஃபே" என்ற சிற்றுண்டி உணவகமும் அமைந்துள்ளது.

சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களுக்கு மிகப் பெரிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்து, இணையதளம் வாயிலாக அப்பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் மதி சந்தை விற்பனை இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதேபோல், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ்,








சுய உதவிக் குழு மகளிருக்கு பலவகையிலும் பயனுள்ள செய்திகளை வெளியிட்டு, சுய உதவிக் குழு மகளிரின் தோழியாக திகழ்கிறது. இச்சிறப்புமிகு இதழானது அனைத்துத் தரப்பினரையும் சென்றடைந்திட, இணையதளம் வாயிலாக சந்தா செலுத்திடும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் இணைய தளம் / கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் இணைய தளம் /கைப்பேசி செயலியின் மூலம் பொதுமக்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் நேரடியாகவே முற்றம் இதழுக்கு சந்தா செலுத்தி, தங்களின் இல்லத்திற்கே முற்றம் இதழ்களை வரவழைத்து பெற்றுக் கொள்ள முடியும்.










# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில்

# செயல்படும் இயற்கைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் – சந்தையாளர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் இயற்கைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் - சந்தையாளர் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி, 21.11.2023 அன்று சென்னை, கிண்டியில் அமைந்துள்ள ரேடிசன் ப்ளூ ஹோட்டலில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயத்தில் ஈடுபடும் பெண் விவசாயிகளை ஒருங்கிணைத்து சுய உதவிக் குழுக்களை அமைத்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது.

> தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் விவசாயத்தில் ஈடுபடும் பெண் விவசாயிகளை ஒருங்கிணைத்து சுய உதவிக் குழுக்களை அமைத்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது.

அந்த மகளிர் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் குறித்த பயிற்சிகளை வழங்கி, அவர்களை இயற்கை முறையில் விவசாயம் மேற்கொள்ள வைத்து, அவர்கள் விளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்திட வாய்ப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இயற்கை முறையில் பொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் மற்றும் பொருட்களை வாங்கும் சந்தையாளர்கள் இடையேயான நட்புறவை வளர்ப்பதற்கும், உற்பத்தியாளர் - சந்தையாளர் இடையே உள்ள இடைத்தரகர்களைத் தவிர்ப்பதற்கும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சியை 21:11:2023 அன்று நடத்தியது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக, அங்கு அமைக்கப்பட்டிருந்த இயற்கை பொருட்களின் கண்காட்சி அரங்குகளை ஒன்றிய அரசின் கூடுதல் செயலாளர் திரு.சரண்ஜித் சிங், இ.வ.ப., அவர்கள் திறந்து வைத்தார். தொடர்ந்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிக்கு இந்நிகழ்வு குறித்து விளக்க உரையாற்றினார்.

இந்த ஒருங்கிணைப்பு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு ஓர் உறுதியான முன் முயற்சியாகும். இதன் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இயற்கை விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு உள்ள சவால்களை நீக்கி,





ஊரக அளவில் வேரிலிருந்து ஆதரவை வழங்கிட முன்னோடியான திட்டங்களை தயார் நிலையில் வைத்துள்ளது.

அதில் ஒன்றாக தற்போது இயற்கை பொருட்கள் உற்பத்தியாளர் - சந்தையாளர் ஒருங்கிணைப்பை நடத்தி, இயற்கை பொருட்கள் உற்பத்தியாளர் மற்றும் பொருட்களை வாங்கும் சந்தையாளர்கள் இடையே நட்புறவை ஏற்படுத்தவுள்ளது. இதன் மூலம் இருதரப்பினரும் கலந்தாலோசிக்கவும், விலைகளை நிர்ணயிக்கவும் மற்றும் வளமான வணிகத்தை நடத்துவதற்குமான பலமான பாதையை அமைக்கிறது.

இந்த இயற்கை பொருட்கள் உற்பத்தியாளர் - சந்தையாளர் ஒருங்கிணைப்பு, அவற்றின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தவும், பொருட்களை வாங்கவுள்ள சந்தையாளர்களிடம் நேரடி இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் மற்றும் சந்தை வாய்ப்புகளை முழுமையாகப் பெற்றிடவும் வழி வகுக்கும். மேலும் வணிகத்தில் உள்ள இடைத்தரகர்களைத் தவிர்ப்பதன் மூலம் இருதரப்பினருக்கும் இடையேயான விற்பனை பரிமாற்றத் தொகையளவு குறைவதுடன், குறைந்த விலையில் உயர்ந்த தரப் பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்யவும் வழிவகைச் செய்யப்படுகிறது. இதுதவிர, இயற்கை பொருட்கள் உற்பத்தியாளர் - சந்தையாளர் இடையே வெளிப்படையான வணிகமும், நட்புறவும் உறுதிச் செய்யப்படுவதுடன் நீண்டகாலத்திற்கான பிணைப்பையும் ஏற்படுத்துகிறது.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 21 உற்பத்தியாளர் மற்றும் சந்தையாளர்களிடையே 4 கோடியே 67 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு உறுதியான சந்தை இணைப்பை உருவாக்கப்படுவதுடன் வணிக வெற்றிக்கான நீடித்த பிணைப்பு உருவாக்கப்படும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒற்றுமைக்கான உறுதிப்பாட்டை உறுதி செய்வதுடன் இருதரப்பு வளர்ச்சிக்குமான நற்சூழலை உருவாக்கும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நடைபெற்ற இந்த உற்பத்தியாளர்-சந்தையாளர் ஒருங்கிணைப்பு, தமிழ்நாட்டு ஊரகப் பகுதி உழவர்களின் வளர்ச்சிக்கு உயர்வை அடைய வழிவகுக்கும். மேலும் இருதரப்பினருக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தி வணிக செயல்பாட்டை வளர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டின் வேளாண் துறையில் உயர்வான ஓர் வெற்றிப் பாதையை உருவாக்கும். அதுமட்டுமின்றி பிற மாநில சந்தையாளர்களின் வழியாக தமிழ்நாட்டின் வேளாண் துறையில் நிலையான மற்றும் உயர்வான வளர்ச்சியை கட்டமைக்கும்.

இந்நிகழ்வில், திரு. ஆர். பி. சிங் (இயக்குநர், NRLM) அவர்கள், திரு. சத்தியமூர்த்தி, இ.வ.ப., (CEO, புதுச்சேரி) அவர்கள், திரு. எஸ். சுரேஷ்குமார், இ.ஆ.ப., (முதன்மை செயல் அலுவலர், காதி கிராப்ட்) அவர்கள், திரு.ராமன் வதுவா (துணை இயக்குநர், NRLM) அவர்கள், திரு. மனோஜ் குமார் மேனன் (ICCOA செயல் இயக்குநர்) அவர்கள், திருமதி. எஸ். கவிதா (கூடுதல் இயக்குநர் (வாழ்வாதாரம்), தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்) அவர்கள், திரு. அருள்ஜோதி அரசன் (கூடுதல் இயக்குநர், வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர் (பொ), இணை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# வணிகம் வளர்க...

## திருப்பூர் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின்

# தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



**பனை மற்றும் கரும்பு வெல்லம்**

நவக்காடு வெல்லம் உற்பத்தியாளர் குழு,
ஊத்துக்குளி வட்டாரம், திருப்பூர் மாவட்டம்.
கைபேசி : 99524 70292



**படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள்**

புதுப்பை விசைத்தறி உற்பத்தியாளர் குழு,
வெள்ளக்கோவில் வட்டாரம்,
திருப்பூர் மாவட்டம்.
கைபேசி : 63800 16146



**ஏலக்காய், மிளகு, கிராம்பு, சீரகம் போன்ற மசாலாப் பொருட்கள்**

விருமாண்டம் பாளையம் ஊராட்சி கூட்டமைப்பு,
ஊத்துக்குளி வட்டாரம், திருப்பூர் மாவட்டம்.
கைபேசி :77081 11150



**தேங்காய் ஓடு கைவினைப் பொருட்கள்**

லக்குமநாயக்கன்பட்டி தேங்காய் ஓடு
கைவினைப் பொருட்கள் உற்பத்தியாளர்
குழு, வெள்ளக்கோவில் வட்டாரம்,
திருப்பூர் மாவட்டம். கைபேசி : 75026 16504



**கைத்தறி புடவைகள்**

இச்சிப்பட்டி மற்றும் நடுப்பட்டி கைத்தறி
புடவை உற்பத்தியாளர் குழு,
பல்லடம் வட்டாரம், திருப்பூர் மாவட்டம்.
கைபேசி : 85261 02057



**கலைநயம் மிகுந்த கைத்தறி பட்டுப் புடவைகள்**

மல்லேகவுண்டம்பாளையம் மற்றும் கணபதி
பாளையம் கூட்டமைப்பு,
பல்லடம் வட்டாரம், திருப்பூர் மாவட்டம்.
கைபேசி :85261 02057



உடல் நலம் காப்போம்...

# பெண்களை தாக்கும் பி.சி.ஓ.எஸ்...

## பின்பற்ற வேண்டிய வாழ்க்கை முறை மாற்றங்கள்...

பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் சுழற்சி முறையில் நிகழக்கூடிய மாதவிடாய் சீராக இல்லாமல் தடைபடுவதும் அல்லது வழக்கத்திற்கு மாறாக அதிக ரத்தப்போக்கை உண்டாக்குவதுதான் பி.சி.ஓ.எஸ். கருப்பையில் உருவாகும் நீர்க்கட்டிகள்தான் இதற்கு முக்கிய காரணம். இந்த நீர்க்கட்டிகள் முழுமையாக உடைந்தால்தான் மாதவிடாய் சீராக இருக்கும்.பி.சி.ஓ.எஸை முற்றிலும் குணப்படுத்த எந்த சிகிச்சைகளும் இல்லாத நிலையில் முறையான வாழ்க்கை முறையே கை கொடுக்கும் என்கின்றனர் மருத்துவர்கள். குறிப்பாக அதிக எடை பிரதான காரணமாக இருக்கிறது.மேலும் முகம் மற்றும் உடலில் அதிகப்படியான முடி வளர்ச்சி, முகப்பரு மற்றும் முடி உதிர்தல் போன்ற பிரச்னைகள் ஏற்படும்.

பாலிசிஸ்டிக் ஓவரி நோய் (பி.சி.ஓ.எஸ்) பொதுவாக பெண்களின் இனப்பெருக்க வயதில் நிகழ்கிறது. இந்த பிரச்சனை உள்ள பெண்களின் கருப்பையின் இரு பக்கங்களிலும் உள்ள சினைப்பைகளில் சிறிய நீர்க்கட்டிகளின் வளர்ச்சி இருக்கும். இதன் விளைவாக கருமுட்டைகள் உருவாக முடியாத நிலை ஏற்படும் வாய்ப்புள்ளது.பி.சி.ஓ.எஸ் பெரும்பாலும் வாழ்க்கை முறை தொடர்பான நோயாக வகைப்படுத்தப்படுகிறது. ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகள், உடற்பயிற்சியின்மை, மோசமான வாழ்க்கை முறை, மன அழுத்தம் மற்றும் போதிய தூக்கமின்மை போன்ற பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

### ஆரம்ப கட்ட அறிகுறிகள்

- ஒழுங்கற்ற தாமதமான மாதவிடாய் சுழற்சி, மிகக் குறைந்த கால மாதவிடாய் போன்றவை நீர்க்கட்டி பிரச்னையின் முக்கிய அறிகுறிகள்.
- பெரியவர்களுக்கு மாதவிடாய் காலங்கள் 21 நாட்களுக்கு முன்னதாகவோ அல்லது 35 நாட்களுக்குப்பிறகோ ஏற்படும்.இளம் பெண்களுக்கு 45 நாட்களுக்கு பிறகு மாதவிடாய் நிகழ்ந்தால் மருத்துவரின் ஆலோசனையை பெறுவது நல்லது.
- உடல் பருமன் மற்றொரு எச்சரிக்கை அறிகுறியாகும். ஏனெனில் பி.சி.ஓ.எஸ் பாதித்த பெண்களில் கிட்டத்தட்ட 40-80 சதவீதம் பேர் அதிக எடை கொண்டவர்களாக இருப்பார்கள்.
- டைப் 2 நீரிழிவு நோயின் பாதிப்பு. இதனால் ரத்தத்தில் சர்க்கரையின் அளவு சாதாரண அளவை விட அதிகரிக்கும்.
- உயர் ரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பு அதிகரிப்பது.
- மனநிலை மாற்றங்கள், மனச்சோர்வு, தன்னம்பிக்கை இல்லாமை மற்றும் பதட்டம் போன்றவை பி.சி.ஓ.எஸ்-ன் அறிகுறிகளாகும்.

### மருத்துவ ரீதியாக கண்டறியும் முறை

பி.சி.ஓ.எஸ் நோயைக் கண்டறிய திட்டவட்டமான சோதனை எதுவும் இல்லை. எனினும் மருத்துவர்கள் பி.சி.ஓ.எஸ் நோயறிதலுக்கு ஆரம்ப கட்ட மருத்துவ பரிசோதனைகளான ரத்த பரிசோதனைகள் மற்றும் அல்ட்ராசவுண்ட் சோதனை செய்வதன் மூலம் கண்டறியலாம்.

### வாழ்க்கை முறை மாற்றங்கள்

பி.சி.ஓ.எஸ் உயிருக்கு ஆபத்தான நோய் அல்ல. ஆனால் நீண்டகால சிக்கல்களை தவிர்க்க ஆரம்ப கட்டத்திலேயே உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மருத்துவ ரீதியாக சிகிச்சையளிக்க முடியும் என்றாலும், சில எளிய வாழ்க்கை முறை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பி.சி.ஓ.எஸ்-ஐ குணப்படுத்தலாம்.

- சத்தான உணவை உட்கொள்வது மற்றும் வழக்கமான உடற்பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு மாறலாம்.
- பீட்சா, பர்கர் போன்ற பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் வெண்ணெய், சீஸ் போன்ற கொழுப்புச்சத்து நிறைந்த பொருள்களை சாப்பிடுவதை தவிர்த்து ஆரோக்கியமான உணவை உட்கொள்ள வேண்டும். நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள், எவ்வளவு சாப்பிடுகிறீர்கள் என்பதையும் தேர்ந்தெடுப்பது அவசியம்.
- வழக்கமான உடற்பயிற்சி, நடைப்பயிற்சியில் ஈடுபடுவது ரத்த சர்க்கரை அளவைக் குறைக்க உதவும்.
- உங்கள் அன்றாட செயல்பாட்டை அதிகரிப்பதன் மூலம் இன்சுலின் அளவை சீராக வைத்துக் கொள்ளலாம். இது உங்கள் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும்.
- தினசரி 7- 8 மணிநேர இடைவிடாத தூக்கம் பி.சி.ஓ.எஸ் வராமல் தடுக்க உதவும் ஒரு முக்கிய காரணியாகும்
- மன அழுத்தம் நம் வாழ்வின் ஒரு பகுதியாக மாறிவிட்டது, ஆனால் பி.சி.ஓ.எஸ்-ல் இருந்து நீங்கள் குணமடைய விரும்பினால் மன அழுத்தத்தை குறைக்க நேரம் ஒதுக்குவது அவசியமாகும். இதற்கு தினமும் யோகா, நீச்சல் போன்றவற்றில் கவனம் செலுத்தலாம்.

## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com




தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

# சொந்தகாலில் நிற்கவைக்கும் சிறு / குறு தொழில் முனைவு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் குறிக்கோளானது, நகர்ப்புர ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்குதல் அவர்களின் வறுமையையும் நலிவுநிலையையும் குறைத்து சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தின் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்ததன்மை அடைய செய்வதுமாகும்.

நகர்ப்புர ஏழை எளிய மக்களுக்கு உபயோகமான சுய வேலைவாய்ப்பு முயற்சிகளுக்கும், சிறு மற்றும் குறு நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சியினை அந்தந்தப்பகுதிகளுக்கு ஏற்றார்போல் வழங்குதல் மற்றும் வேலைவாய்ப்பற்ற அல்லது தங்களது தகுதிக்கும் குறைவான வேலையில் உள்ளவர்களை ஊக்குவித்து அவர்களின் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் அந்தப் பகுதிக்குத் தேவையான பொருட்களை உற்பத்திச் செய்யும் சிறு நிறுவனங்கள் / வியாபாரங்கள் செய்ய ஊக்குவிக்க வழிவகை செய்கிறது.

நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தும் ஏழு கூறுகளில், சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்னும் கூறில் மூன்று துணைக் கூறுகள் உள்ளன.

- தனிநபர் சுய வேலைவாய்ப்புத் திட்டம்
- குழு தொழில் சுய வேலைவாய்ப்புத் திட்டம்
- சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி கடன் திட்டம்.

மேற்கண்ட திட்டங்களில் மூலம் தனிநபருக்கு / குழுவிற்கு அவர்களின் தேவை மற்றும் தொழில் திட்டமதிப்பீட்டின் அடிப்படையில் தனிநபராக இருந்தால் அதிகபட்சம் ரூ.2 இலட்சம் வரையிலும், தொழில் குழுவாக இருப்பின் (3 முதல் 10 நபர்கள் வரை) அதிகபட்சம் ரூ.10 இலட்சம் வரையிலும் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.20 இலட்சம் வரையில் வட்டி மான்யத்துடன் கூடிய வங்கி கடன் இணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் நகர்ப்புர ஏழைகளில் 69,005 தனிநபர் தொழில் முனைவோர்களுக்கு வட்டிமான்யத்துடன் கூடிய வங்கி கடன் இணைப்பு பெற்று சிறு நிறுவனம் / வியாபாரம் செய்து தங்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கி வறுமையை குறைத்துள்ளனர். அதேபோன்று 37,317 தொழில் குழுவில் உள்ள 2,18,260 உறுப்பினர்கள் இந்த திட்டத்தின் மூலம் கடன் பெற்று பல்வேறு வகையிலான சிறு மற்றும் குறுந் தொழில்களை செய்து வருகின்றனர். மேலும், 1,16,816 சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் சிறு/குறு நிறுவனங்களை நடத்தி வருகின்றனர், இதன் மூலம் மகளிர் பொருளாதார வலிமை பெறுவதுடன் குடும்பத்திலுள்ள ஆண்களின் ஆதிக்கமும் குறைகிறது, பெண்களின் பெயரில் சொத்தும் உருவாக்கப்படுகிறது.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்பைச் சாறுபிழித்திடுவீரே
கடலில் மூழ்கி நன் முத்தெடுப் பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடுவீரே

எனும் மகாகவி பாரதியின் கனவை மனதில் நிறுத்தி, தனிநபர் மற்றும் குழுக்களைச் சார்ந்த பெண்கள் இன்று, கார்மெண்ட்ஸ், மளிகைக்கடை, பெட்டிக் கடை, தேநீர் கடை, பழக்கடை, ஆயுர்வேத மூலிகைகள், ஆயுர்வேத சோப்புகள், அழகுசாதனப் பொருட்கள், மரவேலைப்பாட்டு பொம்மைகள், களிமண் பொம்மைகள், அழகு நிலையம், தூய்மைப் பொருட்கள், சமையல் எண்ணெய், சிறுதானியம், சத்துமாவுகள், பேக்கரி, இனிப்பு / காரவகைகள், மஞ்சப்பைகள், மசாலா வகைகள், ஊறுகாய்,







அப்பளம், பண்ணைச் சார்ந்த தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை மேற்கொண்டு தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்துவதோடு, நாட்டின் பொருளாதாரம் மேம்படுத்துவதற்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள் பெரும் பங்காற்றுகின்றனர்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வெற்றி பெற்றவர்களுக்கு உதாரணமாக, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிப் பகுதியில் செயல்படும் வளர்ச்சி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றியை கூறலாம். வளர்ச்சி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிகரமான செயல்பாடு குறித்து, சமுதாய ஒருங்கிணைப்பாளர் திருமதி. நாகேஸ்வரி கூறும்போது, “கடந்த 2017 ஆம் ஆண்டு பன்னிரெண்டு நபர்கள் ஒன்றிணைந்து வளர்ச்சி மகளிர் சுய உதவிக் குழுவினை உருவாக்கினர். இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் நெசவுத் தொழிலை பாரம்பரியமாக கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும் இவர்கள் தனிநபர் நெசவாலையில் தினக் கூலியாக வேலை செய்தனர். அவர்களின் ஒருநாள் சம்பளம் ரூ. 300/- ஆகும்.

சுய உதவிக் குழுவில் சேர்ந்து தொடர்ச்சியாக கூட்டம் நடத்துதல் மற்றும் சேமிப்பு செய்தல் போன்றவற்றின் மூலம் வங்கிக்கும், குழுவிற்கும் நல்ல புரிதல் ஏற்பட்டு அதனடிப்படையில் முதல் மற்றும் இரண்டாம் வங்கி இணைப்பு பெற்ற பின், மூன்றாவது வங்கி இணைப்பாக ரூ. 8,50,000/- பெற்று அதில் 7 நபர்கள் சொந்தமாக நெசவு இயந்திரத்தை வாங்கினார்கள். இதன் மூலம் அவர்கள் பட்டு, பருத்தி மற்றும் பாலிகாட்டன் துணிவகைகள் மிகுந்த தரத்துடன் நெய்து வருகின்றனர். இந்ததுணி வகைகளை விருதுநகர் மாவட்டத்திலுள்ள பிரபல துணிக் கடைகளுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விற்பனை செய்கின்றனர்.

இதன் மூலமாக உறுப்பினர்களுக்கு குறைந்தது நாளொன்றுக்கு ரூ.500/- வரை வருமானமாக கிடைக்கிறது. தினக் கூலிகளாக தங்களின் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த உறுப்பினர்கள், இன்று முதலாளிகளாக மாறியதுடன் தங்களாலும் முடியும் என்று தன்னம்பிக்கை கொள்ளும் வகையில் பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளார்கள் என்றால் நிச்சயம் இதற்கான காரணம் மகளிர் சுய உதவிக் குழு எனும் மக்கள் அமைப்புதான் என்பதனை நாம் உளமார ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

வாழ்க்கையில் முன்னேற குன்றாத உழைப்பு குறையாத முயற்சி வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கையுடன், உறுப்பினர்களை அரவணைத்து, பயிற்சி அளித்து, வங்கி இணைப்பு ஏற்படுத்தி, தொழிலை முறைப்படுத்தி, விற்பனையுக்தியை நெறிப்படுத்தி திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பெருமுயற்சி மேற்கொள்கிறது. அதன் விளைவாக இன்று பல்லாயிரக்கணக்கான பெண்கள் தொழில் முனைவோராக உருவாகி பொருளாதார சுதந்திரம் பெற்றுள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.

**மூர்த்தி கர்ணன்,**
மாநில இயக்க மேலாளர்,
தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்



## வருக... வருக...

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்
செயல் இயக்குநராக பொறுப்பேற்றுள்ள
திருமதி. **ஸ்ரேயா பி. சிங்,** இ.ஆ.ப., அவர்களை
வருக! வருக!! எனமகிழ்வுடன் வரவேற்கிறோம்.

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

## வெண்மைபுரட்சி ஏற்படுத்தும் பால் உற்பத்தியாளர் குழு

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம் பொட்டப்பாளையம், வடுவன்குளம், காஞ்சரங்குளம் ஆகிய ஊராட்சிகளிலும், கல்லல் ஒன்றியம் இளங்குடி, பலாவான்குடி ஆகிய ஊராட்சிகளிலும், மானாமதுரை பெரியகோட்டை, தெக்கூர், செய்களத்தூர், மிளகனூர் ஆகிய ஊராட்சிகளிலும் கறவை மாடு வளர்க்கும் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஆவின் உதவியுடன் பால்பண்ணை தொடங்கப்பட்டு ஒவ்வொரு சொசைட்டியிலிருந்தும் ஆவினுக்கு நாள் ஒன்றுக்கு 60 முதல் 100 லிட்டர் வரை பால் அனுப்பி வருகின்றனர். உறுப்பினர்கள் கறவை மாடு வாங்குவதற்கு சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிக் கடன் மூலம் ரூ. 50,000/- வழங்கப்பட்டுள்ளது. பால் பண்ணைக்குத் தேவையான பால் கேன் மற்றும் இதர உபகரணங்கள் உற்பத்தியாளர் குழு நிதியின் மூலம் பெற்றுள்ளனர்.

ஏற்கனவே தனியாருக்கு பால் ஊற்றும் போது அவரிடமே வட்டிக்கு கடன் பெற்று, குறைந்த விலைக்கு (ரூ.24/-) பால் விற்பனை செய்து வந்தனர். தற்போது ஆவினுக்கு பால் அனுப்புவதால் சராசரியாக லிட்டர் ஒன்றுக்கு ரூ.32/- வரை பெற்று வருகின்றனர். இதனால் மாதந்தோறும் ரூ.1800/- முதல் ரூ.2400/- வரை கூடுதல் வருமானம் பெற்று பயனடைந்து வருகின்றனர். மேலும் மானிய விலையில் தீவனம், மானிய விலையில் காப்பீடு மற்றும் இலவச மருத்துவ சேவை போன்ற பயன்களை பெற்று மிகவும் மகிழ்ச்சியுடன் செயல்பட்டு வருகின்றனர்.



## இயற்கை முறையில் விவசாயம் செய்யும் மகளிர் சுய உதவிக் குழு

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வடமழை மணக்காடு ஊராட்சியில் செயல்பட்டு வரும் வடமழை மணக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் செயல்படும் செவ்வரளி மகளிர் சுய உதவிக் குழுவில் 12 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவினர் இயற்கை முறையில் மாப்பிள்ளை சம்பா, யானைக் கவுனி, தூய மல்லி போன்ற மருத்துவ குணம் வாய்ந்த நெல் ரகங்கள் உள்ளிட்ட 30 வகையான நெல் ரகங்களை பயிரிட்டு அவற்றை விற்பனை செய்து வருகிறார்கள். தாங்கள் உற்பத்தி செய்யும் நெல் ரகங்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடத்தப்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளில் விற்பனை செய்கிறார்கள். மேலும் இயற்கை முறையில் மூலிகை கஞ்சி தயார் செய்தும் விற்பனை செய்து வருகின்றனர். இவற்றின் மூலம் இவர்களுக்கு மாதம் ரூ.30,000/- வரை வருமானம் கிடைக்கிறது. தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள வழிகாட்டிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு செவ்வரளி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



# முப்பதாயிரம் முதலீடு... லட்சங்களில் டர்ன் ஓவர்!

## கவரிங் நகை பிசினஸில் கலக்கும் தங்கம்

**பிசினஸ் என்றால் முதலீடுதான் முக்கியத்துவம் பெறும். முதலீடாக ஒரு பெருந்தொகையை ஒதுக்க வேண்டும் என்று எண்ணியே பல பெண்கள் பிசினஸுக்குள் வரத் தயங்குவார்கள். ஆனால், தங்களுடைய ஐடியாவையும், உழைப்பையும் மூலதனமாகக் கொண்டும் பிசினஸ் தொடங்கலாம் என்பதே தற்போது டிரெண்டில் இருக்கும் கான்செப்ட். இதன் அடிப்படையில் சில ஆயிரங்களில் முதலீடு செய்து, தன் உழைப்பால் பிசினஸ் முதலாளிகளாக வலம்வரும் பெண்களின் வெற்றிக் கதைகள் இனி இதழ்தோறும் வெளியாகும்.**

கோயம்புத்தூர் தொப்பம்பட்டி கிராமத்தில் இருக்கிறது ‘விஜயலட்சுமி மெட்டல் செயின் வொர்க்ஸ் தொழிற்சாலை’. ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் அடைக்கப்பட்ட அந்தத் தொழிற்சாலையில் காப்பர் கம்பிகளை வளைப்பதும், கோப்பதுமாக கவரிங் செயின்கள் தயாரிக்கும் வேலைகள் மும்முரமாக நடக்கின்றன. தங்கம் மற்றும் அவரின் கணவர் தனபாலன் ஆகியோர் இந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர்கள். சிறிய அளவில், வீட்டிலேயே கவரிங் நகைகளைத் தயாரித்து வந்தவர்கள் இன்று சொந்தமாக தொழிற்சாலை அமைத்து, லட்சங்களில் டர்ன் ஓவர் செய்கிறார்கள். கவரிங் செயின்களுக்கு வளையங்கள் தயாரித்த படியே பேச ஆரம்பித்தார் தங்கம்.

● தங்கம்... கணவர் தனபாலுடன்...



“சென்னையில எங்க அம்மா, வீட்ல மெஸ் வெச்சு நடத்திட்டு இருந்தாங்க. நான் ஆறாவது வரை படிச்சேன். அப்புறம் படிப்பு வரலைனு பள்ளிக்கூடத்துக்குப் போகாம மெஸ் வேலைகளைப் பார்க்க ஆரம்பிச்சுட்டேன். மெஸ் வேலைகளையெல்லாம் முடிச்சு நைட் கணக்கு வழக்கு பார்ப்போம். அப்பல்லாம் ஒரு நாளைக்கு கையிருப்பு காசு எவ்வளவுனு ஆசையா கேட்டுத் தெரிஞ்சுப்பேன். ஏதாவது பிசினஸ் செய்யணுங்கிறது சின்ன வயசு லேருந்தே என்னோட ஆசை.

20 வயசுல எனக்கு கல்யாணம் முடிஞ்சுது. கணவரும் படிக்கல. கல்யாணமானபோது என் வீட்டுக்காரர் கவரிங் நகை தயாரிச்சுட்டு இருந்தாரு. அவர்கிட்ட இருந்து நானும் கத்துக்கிட்டேன். ரெண்டு பேரும் சேர்ந்து சென்னையில சின்ன அளவுல பிசினஸ் பண்ணிட்டு இருந்தோம். இதே தொழிலை என் கணவரோட சொந்தக்காரங்க கோயம்புத்தூர்ல பண்ணிட்டு இருந்தாங்க. அதனால சென்னையிலேருந்து கோயம்புத்தூர் வந்துட்டோம். வெறும் முப்பதாயிரம் ரூபாய் முதலீட்டுல எங்க பொண்ணு பேர்ல நிறுவனத்தை ஆரம்பிச்சோம். நகைகளை செஞ்சு நிறைய கடைகள்ல ஏறி இறங்கி ஆர்டர்கள் எடுத்தோம். இப்போ



குழுவுல சேர்ந்த பிறகு பண நெருக்கடி கொஞ்சம் குறைஞ்சுது. பல நேரங்கள்ல குழு உதவியோட தான் பிசினஸை நடத்த முடிஞ்சுது. ஒரு கட்டத்துல பிசினஸை இன்னும் கொஞ்சம் டெவலப் பண்ணலாம்னு நினைச்சப்போ யாருமே கடன் கொடுக்கல. எங்கே போனாலும் அடமானமா ஏதாவது கேட்டாங்க. அடமானம் வைக்க பொருள் இருந்தா நாங்க ஏன் கடன் கேட்கப் போறோம்னு . வழி தெரியாம நின்னப்பதான் அரசாங்கத்தோட 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டம் மூலமா 33 சதவிகிதம் மானியத்தோட ரெண்டு லட்சம் ரூபாய் லோன் கிடைச்சுது. பிசினஸை கொஞ்சம் டெவலப் பண்ணோம். ஒரு மாசத்துக்கு 1,000 செயின்கள் தயாரிச் சுட்டு இருந்த நாங்க, இப்போ மாசம் 4,000 செயின்கள் தயார் பண்றோம்.

மாசம் ஒன்றரை லட்சம் டர்ன் ஓவர் பண்றோம். இத்தனை வருஷ வாழ்க்கையில என்னை உறுத்தற விஷயம், படிக்காமப் போனதுதான். ஒரு ஃபார்ம் நிரப்பணும்னா கூட யாரையாவது தேடணும். படிக்காததுனால நிறைய இடங்கள்ல பேசாம இருந்துருக்கேன். அதனாலயே ஆரம்பத்துல இருந்து எங்க பொண்ணுக்கு படிப்போட முக்கியத்துவத்தைச் சொல்லி வளர்த்தோம். அவளை எம்.எஸ்சி வரை படிக்க வெச்சுட்டோம். சொத்து எதுவும் இல்லைனாலும் எங்க மகளோட படிப்பு எங்களை நிச்சயம் காப்பாத்தி கரை சேர்த்துடும்"

- நம்பிக்கை வார்த்தைகள் பகிர்கிறார் தங்கம்.

15 பேர் எங்ககிட்ட வேலை செய்யற அளவுக்கு பிசினஸ் வளர்ந்திருக்கு" என்ற தங்கம், கவரிங் நகை தயாரிப்பு பற்றி பேச ஆரம்பித்தார்.

"கவரிங் நகையில நிறைய வகை இருக்கு. நாங்க முறுக்கு செயின் மாடல் தயார் பண்றோம். முதல்ல காப்பர் கம்பிகளை வாங்கிட்டு வந்து, அதைத் தட்டி வளையம் மாதிரி ஆக்குவோம். அந்த வளையத்தை ஒண்ணோடு ஒண்ணா கோக்கணும். அப்புறம் துத்தநாகம், சல்ஃபர் கலந்த கெமிக்கல் பொடியில முக்கி எடுத்து காயவெச்சு, சமமாக்கி கவரிங் கடைகளுக்குக் கொடுத்துடுவோம். அவங்க பாலிஷ் பண்ணி என்ன விலைக்கு வேணும்னாலும் வித்துப்பாங்க.

கொரோனா வந்து மூணு வருஷங்களுக்கு வாழ்க்கையையே புரட்டிப்போட்டுருச்சு. பல போராட்டங்களுக்குப் பிறகு இப்போதான் தொழில் திரும்ப சூடு பிடிக்க ஆரம்பிச்சுருக்கு.

நுணுக்கமான வேலைங்கிறதால ஒரு நாளைக்கு 100 செயின்கள்தான் தயார் பண்ண முடியுது. அடிக்கடி பணநெருக்கடி வரும். எங்க ஏரியாவுல இருக்குற மகளிர் சுய உதவிக்

நன்றி! அவள் விகடன்
07:11:2023

## துளசி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக்கதை

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் 39வது வார்டில் 12 உறுப்பினர்களைக் கொண்டு துவங்கப்பட்டது துளசி மகளிர் சுய உதவிக் குழு. சுய தொழில் மேற்கொள்ள முடிவெடுத்த இக்குழுவின் உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில், இந்தியன் வங்கி பிரதான கிளையில் வட்டி மானியத்துடன் வங்கிக் கடனாக ரூ.4,80,000/- பெற்றுத்தரப்பட்டது. அக்கடன் தொகையை கொண்டு துளசி மகளிர் சுய உதவிக் குழுவை சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் இலந்தைப் பொடி, இலந்தை வடை போன்றவற்றை வீட்டில் இருந்தபடியே தயாரித்து, கும்பகோணம் மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் விற்பனை செய்து பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளனர்.



தற்பொழுது குறைந்த அளவில் பொருட்களை தயாரித்து வெளியூர்களுக்கு அனுப்பிவரும் இக்குழுவினர், எதிர்காலத்தில் மிகப்பெரிய அளவில் தங்களின் தொழிலை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்பதே இக்குழுவினரின் இலட்சியமாக உள்ளது. தங்களின் வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு துளசி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சி பகுதியில் வசிக்கும் தோடர் இன பழங்குடி மக்கள் 5 மந்துகளில் வசித்து வருகின்றோம். தோடர் இன மகளிரைக் கொண்டு உதகமண்டலம் நகராட்சி பகுதிகளில் 8 தோடா மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டாவது தலைமுறையினரான எங்களின் குழு தோடா சியோன் தென்றல் என்ற பெயரில் 10 உறுப்பினர்களுடன் 10.08.2021 அன்று துவக்கப்பட்டது. எங்கள் குழு 10 உறுப்பினர்களைக் கொண்டது.

தோடர் இன பெண்கள் ஆகிய நாங்கள் அனைவரும் எங்களுடைய பாரம்பரிய தொழிலான தோடா எம்ராய்டரியை செய்து வருகிறோம். இதுவே எங்களது மேலான வருவாய் ஈட்டும் தொழிலாகும். நாங்கள் தயார் செய்யும் அனைத்துப் பொருட்களையும் விற்பனை செய்ய ஸ்ரீ சங்கமம் பகுதி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக உதகமண்டலம் தாவரவியல் பூங்காவில் ஒரு விற்பனை நிலையம் (குடில்) அமைக்கப்பெற்று விற்பனை செய்து வருகிறோம்.

எங்களது திறனை மேம்படுத்த உதவிய ஸ்ரீ சங்கமம் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

- தோடா சியோன் தென்றல் சுய உதவிக் குழு,
உதகமண்டலம், நீலகிரிமாவட்டம்.



## “வளமான வாழ்வு தந்த பாப்கார்ன் தொழில்”

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் பேரூராட்சி, விவசாய நிலங்கள் நிறைந்த, விவசாய கூலி வேலைபார்ப்பவர்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகும். இங்கு தொழில் நிறுவனங்களோ, வணிக வளாகங்களோ கிடையாது.குறைந்த முதலீட்டில் சிறிய அளவில் தொழில் செய்பவர்களே அதிகம். அவ்வாறு தொழில் செய்ய துவங்கிய நபர்களில் திருமதி. பொற்செல்வியும் ஒருவர். *B.A.* வரை படித்துள்ள பொற்செல்வி, கடந்த 2008 ஆம் ஆண்டு கீர்த்திவாசன் என்பவரை திருமணம் செய்துகொண்டு கீழ்வேளூர் பேரூராட்சியில் வசித்து வந்தார். இவரது கணவரிடம் ‘‘தான் திருமணத்திற்கு முன் வேலைபார்த்த தனியார் பள்ளியில் வேலை பார்க்க விரும்புவதாகவும், *M.A.* மேற்படிப்பு படிக்க விரும்புவதாகவும்’’ கூறினார். ஆனால் அவரின் கணவரோ‘ ‘மேற்கொண்டு *M.A.* படிக்கவும், டியூசன் நடத்திக் கொண்டு ஏதேனும் தொழில் செய்யலாம்’’ என்று ஆலோசனை கூறினார்.



அவரின் யோசனையை ஏற்றுக்கொண்ட பொற்செல்வி தொலைதூரக் கல்வியில் *M.A.* படித்து பாஸ் செய்தார். அவருக்கு ஒரு ஆண் மற்றும் பெண் குழந்தை இருக்கும் காரணத்தால் வேலைக்கு செல்லும் அவரது எண்ணம் நிறைவேறாமல் போனது. இருந்தபோதிலும் ஏதேனும் வருமானம் ஈட்ட வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தொடர்ந்து இருந்து வந்தது.

இச்சூழலில் பொற்செல்வியின் கணவர் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றதால், மாமனார் மற்றும் மாமியாருடன் வசித்து வந்தார். தனது கணவரிடம் தான் தொழில் செய்ய வேண்டும் என வலியுறுத்தி வந்தார். அப்போது அவரது கணவர் “நம்முடைய வீடு மெயின் ரோட்டில் மேல்நிலை பள்ளிக்கு அருகில் இருப்பதால், அதனை சார்ந்த தொழில் செய்யலாம்’’ என அறிவுறுத்தினார். இவரும் அவரது யோசனைக்கு சம்மதம் தெரிவித்து சிறிய அளவில் கடந்த 2013 ஆம் ஆண்டு *Fancy Store* ஒன்று துவங்கி நடத்தினார். இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.2,500/- வரை வருமானம் கிடைத்து வந்தது.

இச்சூழலில் வெளிநாட்டில் வேலை செய்த இவரது கணவர் சொந்த ஊருக்கு திரும்பி, ஏதேனும் தொழில் ஈடுபடலாம் என முயற்சித்த போது, அப்பகுதியில் பாப்கார்ன் தயாரிக்கும் தொழில் இல்லை என்பதும், மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலேயே *Fancy Store* நடத்தி வருவதால் பாப்கார்ன் வியாபாரம் பள்ளி மாணவர்கள் மூலமாக நடக்கும் என நம்பி பாப்கார்ன் செய்யும் தொழிலை துவங்கினர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ரூ.13,500/-க்கு 150 எம்.எல். கொண்டு பாப்கார்ன் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை வாங்கி ரூ.25,000/- முதலீட்டில் பாப்கார்ன் தொழிலை துவங்கினர். நாள் ஒன்றுக்கு 20 பாக்கெட்டுகள் வரை விற்பனை ஆனது. மாதம் ஒன்றுக்கு ஒரு சிப்பம் மட்டுமே கொள்முதல் செய்து பாப்கார்ன் விற்பனை செய்து வந்தனர். அப்போது அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2,500/- வரை வருமானம் கிடைத்துள்ளது. ஒரு ஆண்டுக்கு இவர்களின் உற்பத்தி மாதத்திற்கு 25 கிலோ பாப்கார்ன் தயாரிக்கும் அளவே இருந்துள்ளது.

2019 ஆம் ஆண்டு மாதம் ஒன்றுக்கு இரண்டு சிப்பம் அளவிற்கு விறகு அடுப்பு மூலம் பாப்கார்ன் தயார் செய்து பள்ளி மாணவர்களிடம் விற்பனை செய்து வந்துள்ளனர். 2020 ஆண்டு துவக்கத்தில் கொரோனா பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டன. பொற்செல்வியும், அவரின் கணவரும் வருமானமின்றி வீட்டில் முடங்கும் சூழல் ஏற்பட்டது. கொரோனா பெருந்தொற்று குறையது வங்கி மூன்று மாதத்தில் மளிகை கடைகள் திறக்கலாம் என்ற சூழல் ஏற்பட்டதும், இவர்கள் மீண்டும் தொழிலை துவங்கினர்.

இச்சூழலில் பொற்செல்விக்கு, இந்தியன் வங்கி, கீழ்வேளூர் கிளை மேலாளர் மூலமாக அறிமுகம்



ஆன தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளர் திருமதி. சோனாராணி, பொற்செல்வியிடம், "நீங்களும் 12 மகளிரை கொண்டு ஒரு குழு துவங்கி நடத்தலாமே"என கூற, பொற்செல்வியும் 12 நபர்களை இணைத்து திருமதி. சோனாராணி அவர்களின் வழிகாட்டுதலின்படி தேன் கூடு மகளிர் சுய உதவிக்குழுவினைத் துவக்கி அக்குழுவின் ஊக்குநராகவும் செயல்பட ஆரம்பித்ததுடன், அப்பகுதியில் செயல்படும் அஞ்சுவட்டத்தமன் பகுதி அளவிலான கூட்டமைப்பின் செயலாளராகவும் இருக்கிறார்.

இந்நிலையில், உணவு பொருள் தயாரிப்பவர்களுக்காக *PMFME* என்ற திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. அதில் *Online* வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் சமுதாய அமைப்பாளர் பொற்செல்வியிடம் தெரிவித்தார். அதன்படி பொற்செல்வி *Online* வாயிலாக *PMFME* திட்டத்தில் விண்ணப்பித்து ரூ.40,000/-த்தை *PMFME* கடன் தொகையாகப் பெற்றார்.

அந்தத் தொகையில் ரூ.37,000/-த்திற்கு பாப்கார்ன் செய்யும் பெரிய இயந்திரம் வாங்கினார். அதன் மூலம்



வாரம் ஒன்றுக்கு 25 கிலோ சோளம் பயன்படுத்தி பாப்கார்ன் செய்ய துவங்கினார். பள்ளிகள் மட்டும் அல்லாது சுற்று வட்டாரத்தில் உள்ள 25 கடைகளுக்கு பாப்கார்ன் சப்ளை செய்தார். இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு 125 கிலோ சோளம் (5 சிப்பம்) கொள்முதல் செய்து பாப்கார்ன் விற்பனையை அதிகரித்தார். தனியாக தொழில் செய்து வந்த இவர் தனது சுய உதவிக்குழுவில் உள்ள வசந்தா மற்றும் தமிழரசி ஆகியோரின் உதவியுடன் பாப்கார்ன் விற்பனையை விரிவுபடுத்தினார். மாதம் ஒன்றுக்கு செலவுகள் அனைத்தும் போக ரூ.15,000/- வரை வருமானம் ஈட்டி வருகிறார்.

"பாப்கார்ன் செய்வதற்குத் தேவையான தரமான மூலப் பொருட்கள் மற்றும் பேக்கிங் பொருட்கள் சிவகாசி மற்றும் தென்காசியில் கிடைப்பதாகவும், இதனால் பாப்கார்னின் சுவை மற்ற நிறுவனங்களின் பாப்கார்ன்களை விட நல்ல சுவையுடனும், மொறு மொறுப்பாகவும் இருப்பதால் விரைவில் தன்னால் விற்பனையை அதிகரிக்க முடிந்தது'' என்று பெருமையுடன் கூறும் பொற்செல்வி, மேலும் கூறும்போது, "தனது தொழிலுக்கு தனது கணவர் மற்றும் குடும்பத்தினர் உதவியாக உள்ளதாகவும், அவர்கள் மூலமே கடைகளுக்கு சப்ளை செய்து வருவதாகவும், தற்போது ரூ.12,000/-மதிப்புள்ள *Sealing Machine* வாங்கி பேக்கிங் செய்வதால் விரைவாக அதிகம் பொருட்களைத் தயாரிக்க முடிவதால், அதிக விற்பனையும் செய்ய முடிவதாகவும், மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/- வருமானம் பெற்றதான் *PMFME* திட்டத்தின் மூலம் நிதியுதவி கிடைத்ததால் ரூ.15,000/- வரை வருமானம் ஈட்டுவதாகவும், தனக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும்'' மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டார்.

## மரக்கன்றுகள் நடுதல்

மதுரைமாவட்டம்,சமயநல்லூர்,பரவைபேரூராட்சிக்குட்பட்ட சத்தியமூர்த்தி நகரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடப்பட்டன. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் கதிர்கள் மகளிர் குழுவின் சார்பில் சமயநல்லூர் ஆரம்ப சுகாதார நிலைய வளாகம் மற்றும் சத்தியமூர்த்தி நகர் மயானம் ஆகிய இடங்களில் வேம்பு, பாதாம், நாவல் மற்றும் புங்கை உள்ளிட்ட 600 மரக்கன்னுகள் நடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், மதுரை வனச்சரகர், வனவர், கதிர்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் சட்டம்

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007, என்பது பெற்றோர் மற்றும் மூத்தகுடிமக்களுக்கு பராமரிப்பு மற்றும் நலனை பேண அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்டவாறு, சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்குகிறது. தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலன் மற்றும் பராமரிப்பு விதிகள் உருவாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்ப்பதற்காகவும், குழந்தைகள்/ சட்டப்பூர்வ வாரிசுகளிடம் இருந்து மூத்த குடிமக்கள், பெற்றோருக்கு பராமரிப்புத் தொகையைப் பெற, ஒவ்வொரு துணை கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் ஒரு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர்கள், பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். தீர்ப்பாயத்தின் உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

ஒரு மூத்த குடிமகன் அல்லது பெற்றோர் தனது சொந்த வருவாயிலோ அல்லது அவருக்குச் சொந்தமான சொத்திலிருந்தோ தன்னைப் பராமரிக்க முடியாத நிலையில், சட்டத்தின் பிரிவு 5-ன் கீழ் தனது குழந்தைகள்/சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க உரிமை உண்டு.

- மாதாந்திர வாழ்க்கைப்படி வேண்டி, இந்த சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் 90 நாட்களுக்குள் தீர்க்கப்படும்.
- குழந்தைகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியத் தவறினால், தீர்ப்பாயம் அபராதம் விதிக்கலாம் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் செலவினங்களுக்காக ஒவ்வொரு மாத உதவித் தொகையின் முழு அல்லது எந்தப் பகுதியையும் ஏற்றுக்கொள்ள உத்தரவிடலாம் அல்லது ஒரு மாத வரையிலோ அல்லது பணம் செலுத்தப்படும் வரையிலோ நீட்டிக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கலாம்.
- அதிகபட்ச பராமரிப்பு வாழ்க்கைப்படி மாதம் ரூ. 1000/- விட அதிகமான நிர்ணயிக்கக் கூடாது.
- தீர்ப்பாயம், விசாரணை நிலுவையில் இருக்கும் போது, முதியோருக்கு இடைக்கால பராமரிப்புக்காக மாதாந்திர உதவித்தொகையை வழங்க, குழந்தைகள் அல்லது உறவினர்களுக்கு உத்தரவிடலாம்.
- மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பான நபர்கள் மூத்த குடிமக்களை கைவிட்டால், அத்தகைய நபர்களுக்கு மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது ரூ. 5,000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

## மண்ணெடுத்து சிலைகளை உயிரூட்டினோம், நிதியெடுத்து தொழில்தனை விரிவாக்கினோம்!

எனது பெயர் பூமதி (வயது 22). நான் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரத்தில் உள்ள கீழ்க்குடி அம்மன் ஜாக்கி என்னும் ஊராட்சியில் தாய்தந்தையுடன் வசிக்கிறேன். எனது தாயார் இப்பகுதியில் செயல்படும் சுய உதவிக்குழுவில் சுமார் 11 ஆண்டுகளாக உறுப்பினராக உள்ளார். எங்கள் குடும்பத்தினர் 1970ம் ஆண்டு முதல் பரம்பரை ரபரம்பரையாக சிலை செய்யும் தொழிலை செய்து வருகின்றனர். எங்களது குலத்தொழில் என்பதால் குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து சிலைகளை செய்து வருகிறோம்.

மண் சிலைகள், மண் பொம்மைகள், கோவில் திருவிழாவிற்கு பயன்படுத்தும் மண் குதிரை எடுப்புகள், அம்மன் சிலைகள் போன்றவைகளை வடிவமைத்து விற்பனை செய்து, அதன் மூலம் வருமானம் ஈட்டி வந்தோம். எங்களுக்குக் கிடைக்கின்ற வருமானம் குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. அதனால் எங்கள் தொழிலை நாங்கள் விரிவுபடுத்தி வருவாயை அதிகரிக்க எண்ணினோம்.

அதற்கான உதவியை நாங்கள் நாடியபோது வாழ்ந்து காட்டுவோம் திட்டம் குறித்து எங்கள் ஊராட்சியில் பணியாற்றி வரும் தொழில்சார் சமூக வல்லுநர் மூலம் அறிந்தேன். அந்த வாய்ப்பு எனக்கு கடவுள் கொடுத்த வரப்பிரசாதம் போல் இருந்தது. எங்களது தொழிலை விரிவுபடுத்தும் நிலையில் ஊராட்சியில் பணியாற்றி வரும் தொழில்சார் சமூக வல்லுநர் மூலம் இணைமானியத் திட்டத்தின் கீழ் கடனுதவியைப் பெற இணையவழி மூலம் விண்ணப்பித்தேன்.

இந்தத் திட்டத்தின் மூலம் நான் உரிய ஆவணங்களை வங்கிக்கு பரிந்துரை செய்து நாகுடி IOB வங்கியில் 30 மானியத்துடன் ரூ.4,00,000/-கடன் உதவி பெற்றுத் தந்தனர். அந்த நிதியில் சிலைகள் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருட்களையும், இதர உபகரணங்களையும் வாங்கிக் கொண்டேன். 2023 செப்டம்பர் மாதம் முதல் கடனை திருப்பி செலுத்தி வருகிறேன். மாதத்தவணை தொகையாக ரூ.5153/- கட்டி வருகிறேன். இந்த இணைமானியக்கடன் என்னுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த மிகவும் உதவியது.

மேலும் திட்டத்தின் வழியாக தொழில் மேம்பாடு பயிற்சி, உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தையில் எப்படி விற்பனை செய்வது போன்ற தொழில்யுக்திகளை கற்றுக் கொடுத்தனர். இதன் மூலம் எங்கள் தொழில் வளர்ந்ததுடன் வருவாயின் அளவும் உயர்ந்துள்ளது. எங்களது தொழில் மேம்பாட்டுக்கு உதவிய வாழ்ந்துகாட்டுவோம் திட்டத்திற்கு நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

- பூமணி, கீழ்க்குடி அம்மன் ஜாக்கி ஊராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.



## நோய்த்தொற்றில்லா ஆடு வளர்ப்புக்கு, வழிகாட்டி பயிற்சியளித்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றி!

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரத்தில் உள்ள கல்யாணி ஊராட்சியில் செயல்படும் மகளிர் உற்பத்தியாளர் குழுவினர் தனித்தனியாக ஆடுகளை வளர்த்து வந்தனர். இவர்களை ஒருங்கிணைத்து ஆடு வளர்ப்பு உற்பத்தியாளர் குழுவாக வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உருவாக்கியது. இவர்களுக்கு ஒரு சமுதாயப் பண்ணைப் பள்ளி உருவாக்கப்பட்டது. அந்தப் பள்ளியின் மூலம் ஆடு வளர்ப்பில் ஆர்வமுள்ள மகளிருக்கு பயிற்சி அளிப்பதற்காக, 15 ஆண்டுகள் ஆடு வளர்ப்பில் அனுவமுள்ள திரு. ஸ்டாலின் என்பவரை பயிற்றுநராக (ஸ்பார்க்) நியமித்தது. இந்தப் பள்ளியில் பயிற்சி அளிப்பதற்காக VKP திட்டத்தின் மாநில அலுவலகத்திற்கு ஒரு முன்மொழிவு அறிக்கை அனுப்பியதன் அடிப்படையில் திட்டத்தின் மூலம் 1,09,600 ரூபாய் பயிற்சி நிதியாக பெறப்பட்டது.

அந்த நிதியைப் பயன்படுத்தி 30 உறுப்பினர்களுக்கு ஆடு வளர்ப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியில் பயின்ற பாரதி என்பவர் அனுபவம் குறித்து கூறும்போது, “என் பெயர் பாரதி, கல்யாணி கிராமத்தில் வசித்து வரும் நான், வீட்டில் இருக்கும் வேலைகளைப் பார்த்துக்கொண்டு, இரண்டு ஆடுகளையும் வளர்த்து வந்தேன். ஆனால் சரியாகப் பாதுகாக்கத் தெரியாததால் எனக்கு நட்டம் ஏற்பட்டது.




அப்போது எங்கள் கிராமத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாயப் பண்ணைப் பள்ளி மூலமாக பயிற்சி கொடுத்தார்கள். அதில் கலந்து கொண்ட எங்களுக்கு ஆடு வளர்ப்பு, தீவன மேலாண்மை, நோய் தடுப்புமுறைகள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. இப்போது நாங்கள் நலமான முறையில் ஆடுகளை வளர்த்து வருகிறோம். தரமான ஆடு வளர்ப்புக்கு பயிற்சிகளைத் தந்து எங்களை மேம்படுத்திய VKP திட்டத்துக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று குறிப்பிட்டார்.

## ஒளியை உருவாக்கப் பயிற்சிப் பெற்றோம்! ஒளிமயமான வாழ்வைத் தொட்டோம்!

கடலூர் மாவட்டம், மேல்புவனகிரி வட்டாரம், உளுத்தூர் ஊராட்சியில் 20க்கும் மேற்பட்ட குடும்பத்தில் உள்ள பெண்கள் வேலைவாய்ப்பின்றி கூலித்தொழில் செய்து வருகின்றோம். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் பணி மேற்கொள்ளும் பொழுது, LED பல்பு தயாரிப்புத் தொழிலுக்கு நல்ல வேலைவாய்ப்பு இருப்பதாகவும், அதற்கான பயிற்சிகளை வழங்கப் போவதாகவும் எங்களிடம் தெரிவித்தனர்.

அதன் அடிப்படையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம், எங்கள் கிராமத்தில் இருக்கும் 20 பெண்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு LED பல்பு தயாரிக்கும் தொழிற் பயிற்சியை வழங்கியது. இந்தப் பயிற்சிக்காக ரூ. 75,000/- நிதி திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. பெரிய நெற்குணம் ஊராட்சியை சேர்ந்த செந்தில்குமார் என்பவர் LED பல்பு தயாரிப்பதுடன், அதற்குத் தேவையான மூலப்பொருட்களின்கடையையும்வைத்துள்ளார். அவரிடம் உள்ள தொழில் திறனைக் கண்டு, அந்தப் பகுதியில் உள்ள பெண்களுக்கு LED பல்பு தயாரிக்கும் தொழிற்பயிற்சியை கொடுப்பதற்கான பயிற்றுநராக செந்தில் குமாரை வாழ்ந்து காட்டுவோம் திட்டம் தேர்வு செய்தது.



செந்தில்குமார் திட்டத்தின் பயிற்சி நிதியை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் பெற்றுக்கொண்டு, எங்களுக்கு 20 நாட்கள் பயிற்சியை வழங்கினார். தற்பொழுது நாங்கள் எங்கள் பயிற்றுநரான செந்தில் குமாரிடம் LED பல்பு உற்பத்தி செய்யும் பணியை செய்து வருகின்றோம். இது தவிர பல்வேறு தனியார் நிறுவனங்களிலும் இந்த LED பல்பு உற்பத்தியை செய்து வருகிறோம். இதன் மூலம் நாங்கள் ஒவ்வொருவரும் தினசரி ரூ.500/-முதல் ரூ.700/- வரை வருவாய் பெறுகிறோம். எங்களுக்குத் தொழிற்பயிற்சி அளித்து, தொழில் வாய்ப்பு மற்றும் வருவாயை ஏற்படுத்திக் கொடுத்த வாழ்ந்துகாட்டுவோம் திட்டத்திற்கு நாங்கள் அனைவரும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நீங்கள் ஊரகப் பகுதி பெண் தொழில் முனைவோரா ?
# உங்களுக்கான தொழில் ஆதரவுகள் இதோ!

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மதி சிறகுகள் தொழில்மையம் (MSTM), ஆர்வமுள்ள புதிய தொழில் முனைவோருக்கு அத்தனை உதவிகளையும் வழங்கி, தொழில் முனைவோரை மேம்படுத்தி, தமிழ்நாட்டின் தொழிற்துறையை வளப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள சுய உதவிக்குழு பெண் தொழில் முனைவோர்களுக்கு, தொழில் வளர்ச்சித் தொடர்பான அத்தனை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

### இம்மையங்களில் வழங்கப்படும் சேவைகள்

- சிறந்த தொழில் திட்டங்களை வகுத்து கொடுக்கப்படுகின்றன.
- உறுதியான வளர்ச்சி இணைப்புகள் உருவாக்கிக் கொடுக்கப்படுகின்றன.
- உங்கள் வணிகப் பயணங்கள் தொடங்கி வைக்கப்படுகின்றன.
- தொழில் திட்டங்களுக்கு மதிப்பூட்டி தரமுயர்த்தப்படுகின்றன
- தொழிற்துறை வல்லுநர்களுடன் வழிகாட்டப்படுகிறது.
- அரசு வழங்கும் நிதியுதவித் திட்டங்களைப் பெற வழிகாட்டப்படுகின்றன.
- தொழில்நுட்ப ஒருங்கிணைப்புடன் தொழிலை வளர்க்க உதவிகள் அளிக்கப்படுகின்றன.

### யாரெல்லாம் இம்மையங்களில் பயன் பெறலாம் ?

தனிநபர் தொழில் முனைவோர், நுண்தொழில் முனைவோர், குறுந்தொழில் முனைவோர், சிறுதொழில் முனைவோர், தொழிற்குழுக்கள் (EGs), உற்பத்தியாளர் குழுக்கள் (PGs) மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் (PCs) ஆகியோர் பயன் பெறலாம்.

### இம்மையங்களில் வழங்கப்படும் கூடுதல் சேவைகள்

உயர்ந்த மதிப்புடன் கூடிய சந்தை இணைப்புகள், பொருளாதார அமைப்புடன் கூடிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன, திறன் வாய்ந்தவர்களின் பயிலரங்குகளின் மூலம் திறனுயர்த்தி மேம்படுத்துகின்றன. மேலும் இம்மையங்கள் வசதிகளை வழங்கும், ஆவணங்களை பதிவு செய்யும், அனைத்து சட்ட சிக்கல்களையும் தீர்த்து வைக்கின்றன மற்றும் உரிமங்கள் மற்றும் இணக்கங்களைப் பாதுகாக்கின்றன.

உங்கள் தொழிலுக்கு ஆதரவுகளைப் பெற உங்கள் வட்டாரத்திலுள்ள மதி சிறகுகள் தொழில் மையத்தை (MSTM) அணுகி, உங்கள் தொழில் கனவை மெய்யாக்குங்கள்! தமிழ்நாடு முழுவதும் 42 இடங்களில் உள்ளன!



## TNPSC குரூப் – 4 தேர்வுக்கு இணையவழி பயிற்சி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம், குரூப் - 4 தேர்வுகளை விரைவில் அறிவிக்க உள்ளது. இந்தத் தேர்வை, ஊரகப் பகுதி மாணவர்கள் அதிகம் பேர் எழுத வசதியாக, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில், இணையதள பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பயிற்சி வகுப்புகள். “M TN” வலைதள பக்கம், ‘யு டியூப்’ சேனலிலும் ஒளிபரப்பாகின்றன.

தேர்வு எழுத உள்ளவர்கள், தங்களிடம் உள்ள ஸ்மார்ட் போன் வழியாக இந்த இணைய வகுப்பில், இலவசமாக பாடங்களைப் பயின்று, தகுதி தேர்வில் பங்கேற்கலாம். பாடத் திட்டங்களை தொகுதி வாரியாக வடிவமைத்து, தினமும் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாதிரித் தேர்வுகள் நடத்தி, அதை மதிப்பீடு செய்த முடிவுகள் வெளியிடப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமை நேரலையில் வினாத்தாள் குறித்த விவாதம் நடைபெறுகின்றன.

போட்டித் தேர்வுகள் எழுதுபவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, வெற்றி பெற வேண்டும் என்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் வாழ்த்துகிறது.

# ராகி இட்லி

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் சத்தான ராகி இட்லி செய்வோம் வாருங்கள்.

### தேவையான பொருட்கள்

ராகி, சிகப்பு அரிசி, சிகப்பு அவல், உளுந்து மற்றும் உப்பு

### சட்னிக்கு தேவையான பொருட்கள்

நிலக்கடலை, வர மிளகாய், இஞ்சி, பூண்டு மற்றும் தேங்காய்

### செய்முறை

இரண்டு டம்ளர் ராகியையும், 2 டம்ளர் சிகப்பரிசியையும் நன்றாக கழுவி குறைந்தது 5 நிமிடம் வரை ஊற வைத்து கொள்ள வேண்டும். ஒரு டம்ளர் உளுந்தையும், ஒரு டம்ளர் சிகப்பு அவலையும் கழுவி சுத்தம் செய்து அரைமணி நேரம் ஊற வைத்து கொள்ள வேண்டும். ஒரு ஸ்பூன் வெந்தயத்தை தனியாக தண்ணீர் விட்டு உற வைத்து கொள்ள வேண்டும்.



முதலில் ஊற வைத்த வெந்தயத்தை கிரைண்டரில் சேர்த்து அரைக்க வேண்டும். ஒரு 3 நிமிடம் வெந்தயம் ஓடும் போது வெந்தயம் பொது பொதவென வர ஆரம்பிக்கும். அந்த சமயத்தில் உளுந்தை சேர்த்து அரைக்க வேண்டும். உளுந்தையும் வெந்தயத்தையும் குறைந்தது 25 நிமிடம் வரை அரைக்க வேண்டும். உளுந்தை அரைத்து ஒரு பாத்திரத்திற்கு மாற்றிய பின் அதில் ஊற வைத்த சிகப்பு அவலை அரைக்க வேண்டும். சிகப்பு அவலை அரைத்து எடுத்த பின் அதில் ஊற வைத்த சிகப்பு அரிசி மற்றும் ராகியை சேர்த்து நன்றாக அரைக்க வேண்டும்.

பின்னர் அரைத்த மாவை ஒரு பாத்திரத்திற்கு மாற்றி தேவையான அளவு உப்பு சேர்த்து கை வைத்து நன்றாக கிளறி விட வேண்டும். இந்த மாவை குறைந்தது 8 மணி நேரம் புளிக்க விட வேண்டும். பின்னர் வழக்கம்போல் நாம் இட்லி தட்டில் துணி வைத்து இட்லி ஊற்றி கொள்ள வேண்டும். (இட்லி ஊற்றுவதற்கு முன் மாவை அடி ஒட்ட நன்றாக கலந்து விட்டு ஊற்ற வேண்டும்). நன்றாக வேக வைத்து எடுத்தால் மெத் மெத் என ஸ்பான்ஞ்ச் போன்ற ராகி இட்லி ரெடி

இதே மாவில் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து தோசை ஊற்றலாம். தோசை ஊற்றும்போது நெய்விட்டு செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

## பயனுள்ள குறிப்புகள்

- எந்த அரிசியாக இருந்தாலும் 15 நிமிடங்களுக்கு குறையாமல் ஊற வைத்து உலையில் வேகவைத்தால் அது வேகும் நேரம் குறையும். எரிபொருள் மிச்சமாகும்.
- புத்தக பீரோவில் புகையிலைத் துண்டுகளைப் போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.
- ஊதுவத்திகளை ஏற்றுவதற்கு முன் நீரில் நனைத்து பின்பு காற்றில் உலரவிட்டு ஏற்றினால், அதிக மணமாகவும் இருக்கும் நன்றாகவும் எரியும்.
- பட்டுச் சேலைகளைத் துவைக்கும்போது அலசும் நீருடன் சிறிது எலுமிச்சை சாறு கலந்து கொண்டால் சாயம் போகாது; மங்காது. பட்டுச் சேலையும் பளிச்சிடும்.
- தரையைத் துடைக்கும் தண்ணீரில் இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு துடைக்க, ஈக்கள் பறந்தோடும். தொந்தரவில்லாமல் துடைக்கலாம்.
- பட்டுப் புடவைகள் மடிக்கும் போது ஜரிகையை உள்புறம் வைத்து மடித்தால் ஜரிகை கறுத்துப் போகாமல் பாதுகாக்கலாம்.

திரு. **பா. பொன்னையா,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. **க. முத்து மீனாள்,**
கூடுதல் இயக்குநர்

திரு. **இரா. இரவிச்சந்திரன்,**
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினரால் நிர்வகிக்கப்படும் அட்சயா ஜவுளி வியாபாரம் மற்றும் இ–சேவை மையம்



நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்காடு ஊராட்சியில் வசிக்கும் தாமரைச் செல்வி செல்வராசு, ஏழை குடும்பத்தை சேர்ந்தவர். தனது 2 குழந்தைகளுடன் குடிசை வீட்டில் வசித்து வந்த இவரும் இவரின் கணவரும் உப்பளத்திற்கு தினக் கூலியாக சென்று வேலை செய்து வந்தார்கள். உப்பளத்தில் குறிப்பிட்ட சீசனுக்கு மட்டுமே வேலை இருக்கும். இந்நிலையில் தாமரைச் செல்வி தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலின் படி பாகம் பிரியாள் மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்து வங்கி மூலம் நேரடிக் கடனாக ரூ.50,000/- பெற்று, ஒரு கடையை வாடகைக்கு எடுத்து ஜவுளி வியாபாரம், ஜெராக்ஸ், போட்டோ எடுத்தல், எழுது பொருட்கள், பேன்சி பொருட்கள் மற்றும் காலணிகள் விற்பனை செய்து வருகிறார். மேலும் அரசு வழங்கிய இ-சேவைமைய அங்கீகாரச் சான்று பெற்று, சான்றுகள் பெற்று தருதல், ஆதார் மற்றும் இதர ஆன்லைன் சேவைகள் போன்றவற்றின் மூலம் ஒரு மாதத்திற்கு ரூ.6,000/- முதல் ரூ.8,000/- வரை வருவாய் பெற்று, வங்கி கடன் ரூ.34,000/- திரும்பசெலுத்தியதுடன், தனக்கு சொந்தமாக ஒரு கான்கிரீட் வீடும் கட்டியுள்ளார். "தொழிலை மேலும் விரிவாக்கம் செய்வேன் என்றும், தனது வாழ்விற்கு வழிகாட்டிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு தங்களின் குடும்பம் சார்பாக நன்றியையும்" தெரிவிப்பதாக தாமரைச் செல்வி மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

## வருமானம் பெருக்கும் நடவடிக்கையின் மூலம் தையல் தொழில் செய்தல்



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்படும் செங்கல்பட்டு மாவட்டத்தில் முகையூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் இணைந்துள்ள செல்லியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கும் என் பெயர் சாமுண்டீஸ்வரி. நான், முன்பு கார்மென்ட்ஸில் கூலிக்கு வேலைக்கு சென்று வந்தேன். இந்நிலையில் சுய தொழில் செய்வதற்காக கூட்டமைப்பில் இருந்து கடன் தொகை வழங்குவதாக தெரிவித்தனர். அதனை தொடர்ந்து என்னுடைய பங்குத் தொகையாக ரூபாய் 2,000/-த்துடன், கூட்டமைப்பிலிருந்து கடன் தொகையாக ரூ.20,000/- பெற்று, தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உதவியுடன் 15.10.2022 அன்று புதிய தையல் இயந்திரம் வாங்கி தையல் தொழிலை துவங்கி, நல்ல முறையில் இலாபகரமாக தொழிலை நடத்தி வருகிறேன். இந்த வருமானத்திலிருந்து அசலும் வட்டியுமாக இதுவரை ரூ.18,000/-த்தை நான் திரும்பச் செலுத்தி உள்ளேன். ஒவ்வொரு மாதமும் இலாபமாக ரூ.7,000/-வரை பெறுகிறேன். இந்த வருமானத்தை கொண்டு எனது குடும்பத்தை பொருளாதார நிலையில் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்கிறேன். இத்தொழில் மூலம் முன்பு இருந்ததைவிட தற்போது எனது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. என்னுடைய வாழ்க்கை முன்னேற்றம் அடைவதற்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஸ்ரீ முத்தாலம்மன் கோழிப் பண்ணை

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகக் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிதி உதவி வழங்கி, அவர்களை தொழில் மேற்கொள்ள ஊக்கப்படுத்தி மக்களின் வாழ்வில் வாழ்வாதார வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம், விழுப்புரம் மாவட்டம், ஆலப்பாக்கம் ஊராட்சியில் வசிக்கும் திருமதி. சுதா என்பவர் நிதி உதவி பெற்று ஸ்ரீ முத்தாலம்மன் கோழிப் பண்ணை நடத்தி வருகிறார்.

தனது வளர்ச்சிக்கு தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செய்துள்ள உதவி குறித்து திருமதி சுதா கூறும் போது," மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்த நான், ஆலப்பாக்கம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் இணைந்துள்ள அண்ணா மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய கணவர் திரு. முத்து விவசாய கூலிவேலை செய்து வருகிறார். நானும், அஞ்சலை தேவி என்பவரும் சேர்ந்து 50 சென்ட் பரப்பளவிலான இடம் ஒன்றை குத்தகைக்கு எடுத்து, அதில் கோழி வளர்ப்பு தொழில் செய்து வருகிறோம். கடந்த 2014ம் ஆண்டு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் குறுந்தொழில் மேம்பாட்டின் கீழ் வட்டியில்லா கடனாக ரூபாய் 2,15,500/- பெற்ற நாங்கள், தற்பொழுது இத்தொழிலை சிறப்பாக செய்து வருகிறோம்.

ஸ்ரீ முத்தாலம்மன் கோழிப்பண்ணை தொழில் துவங்கியதிலிருந்து இதுநாள்வரை சுமார் 2,30,000 கோழிகளை விற்பனை செய்துள்ளோம். கோழி வளர்ப்பு மூலம் எங்களுக்கு கிடைத்த இலாபத்தில் ரூ.2,15,500/- கடனை திரும்ப செலுத்தியுள்ளோம். எனக்கு கிடைத்த இலாபத் தொகையில் என் வீட்டை பழுதுபார்த்து சரி செய்துள்ளேன். என்னுடன் இணைந்து கோழிப்பண்ணை தொழிலில் ஈடுபட்ட அஞ்சலை தேவி, தனக்கு கிடைத்த இலாபத்தை கொண்டு தன் மகளுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்,

மேலும் முத்தாலம்மன் கோழிப்பண்ணை இலாபகரமாக உள்ளமையால் அனுமந்தை பல்லவன் கிராம வங்கி மேலாளரை சந்தித்து தொழில் மேம்பாட்டிற்காக கடன் கேட்டதைத் தொடர்ந்து, அவர் இத்தொழிலை பார்வையிட்டு நல்ல முறையில் செயல்படுகிறது என்று அறிந்த பின்னர் 3 இலட்சம் ரூபாய் 12% வட்டியுடன் கடன் வழங்கினார். எங்கள் தொழிலை மேலும் வளர்ச்சிடைய ஊக்குப்படுத்தினார்,

ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் கோழிப் பண்ணை தொழில் துவங்க எங்களுக்கு கடன் உதவி அளித்து, எங்களை தொழில் முனைவோர்களாக்கிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று திருமதி சுதா குறிப்பிட்டார்.



## தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் வருமானம் பெருக்கும் தொழிலுக்கான நிதி

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஊராட்சியை சேர்ந்த உசிலங்காடு மீனவ கிராமத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் புனிதம் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள திருமதி. டயானா செல்வி (க/பெ.லூர்க்காஸ்), தனது கணவருடன் இணைந்து சிறிய அளவிலான அரவை இயந்திரத்தைக் கொண்டு அரவை தொழில் செய்து வந்தார். கடந்த ஓராண்டாக கொரோனா தொற்று காரணமாக கடை திறக்கப்படாமலும், அரவை தொழில் மந்தமாக நடைபெற்ற காரணத்தினாலும் போதுமான வருமானம் கிடைக்கப் பெறாததால் அரவை இயந்திரங்களில் உள்ள சிறு சிறு பழுதுகளை சரிசெய்யவும், தேவையான இதர உபகரணங்கள் வாங்கவும் போதுமான பண வசதியில்லாமல் டயானா செல்வி சிரமப்பட்டு வந்தார்.



இந்த நிலையில் டயானா செல்வி, வருமானம் பெருக்கும் தொழில்கள் நிதியிலிருந்து கடன் கேட்டு தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திடம் விண்ணப்பித்திருந்தார். அவருக்கு உடனடியாக ரூ.15,000/-ம் கடன் தொகையாக விடுவிக்கப்பட்டது. தான் பெற்ற கடன் தொகை மூலம் அரவை இயந்திரங்களின் பழுதுகளை நீக்கியும், தேவையான உபகரணங்களை வாங்கியும் அரவை தொழிலை மீண்டும் துவக்கினார் டயானா செல்வி. தற்போது அரவை தொழில் இலாபகரமாக நடைபெற்று வருகிறது. தனக்கு நிதியுதவியை வழங்கிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கும், மணமேல்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் டயானா செல்வி தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றார்.

## வருமானம் பெருக்கும் தொழிலுக்கான நடவடிக்கைக்கான நிதிகடன் மூலம் மீன் வியாபாரம்



தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்பட்டு வரும் செங்கல்பட்டு மாவட்டத்தில், கானத்தூர் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் இணைந்துள்ள கடல் ஓசை சுய உதவிக்குழுவின் உறுப்பினராக உள்ள என் பெயர் பத்மா. எனக்கு சுய தொழில் செய்வதற்காக கூட்டமைப்பில் இருந்து கடன் வழங்குவதாக தெரிவித்தனர். அதனை தொடர்ந்து என்னுடைய பங்கு தொகையாக ரூபாய் 2,000/-மும், கூட்டமைப்பிலிருந்து கடன் தொகையாக ரூ.20,000/-மும் பெற்று தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் உதவியுடன் 20.02.2022 அன்று மீன் வியாபாரத்தை துவக்கி, நல்ல முறையில் இலாபகரமாக நடத்தி வருகிறேன். இந்த வருமானத்திலிருந்து நான் பெற்ற கடன் தொகையான ரூ.20,000/-த்தை அசலும் வட்டியுமாக முழுமையாகத் திரும்பச் செலுத்திவிட்டேன். ஒவ்வொரு மாதமும் ரூ.9,000/- வரை இலாபமாக பெறுகிறேன். இந்த வருமானத்தை கொண்டு எனது குடும்பத்தை சிரமமின்றி நடத்தி வருகிறேன். இத்தொழில் மூலம் முன்பு இருந்ததை விட தற்போது வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. எங்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- பத்மா, கடல் ஓசை சுய உதவிக் குழு,
கானாத்தூர் ஊராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,30,100 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

# பனையோலை நகைப்பெட்டிகளால் புதுமையைக் காண்கிறோம்!

# பெண்களின் கரங்களில் பெருமையைக் காண்கிறோம்!

## பனையோலை நகைப் பெட்டிகள் உற்பத்தியாளர் குழு

**கரைசுத்து புதூர் ஊராட்சி, திருநெல்வேலி மாவட்டம்**















**எங்களின் உற்பத்திப் பொருட்கள்:**

1. வெவ்வேறு அளவிலான நகைப் பெட்டிகள்
2. பூஜை கூடைகள்
3. பழத்தட்டுகள்
4. இடியாப்பம் தட்டுகள்

எங்கள் உற்பத்திகளை வாங்க தொடர்பு கொள்ளுங்கள்:

**6374200029**

## தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th December 2023 Posted at Patrika Channel, Egmore.




**நீங்கள் சுற்றுச்சூழல் ஆதரவாளரா?
சுத்தமான, பாதுகாப்பான சுற்றுச்சூழலை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்ல நினைக்கிறீர்களா?**

**அப்ப நீங்க எங்கள மாதிரி குழுக்கள் தயாரிக்கக் கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை ஆதரிங்க. இதனால் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும். எங்க வாழ்க்கையும் மேம்படும்.**

**முயற்சி செய்வதற்கு வயது ஒரு தடையில்லை... முயற்சித்து பாருங்கள்...
தன்னம்பிக்கை தான் வெற்றிபெற வழி செய்யும்...**

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

### சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SMID)

1. சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் சுழல்நிதி வழங்குதல்
2. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல்நிதி வழங்குதல்
3. சுய உதவிக் குழு மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை மற்றும் ஆளுமை பயிற்சி வழங்குதல்

### சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)

1. தனிநபர் தொழில் முனைவோர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வட்டி மான்யத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்குதல்
2. குழு தொழில் முனைவோர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வங்கிகளில் வட்டி மான்யத்துடன் கடன் வழங்குதல்
3. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளில் வட்டி மான்யத்துடன் கடன் வழங்குதல்